# மெட்ரோ ரயில் சேவை மீண்டும் தொடக்கம்

நிவர் புயல் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த மெட்ரோ ரயில் சேவை நேற்று முதல் மீண்டும் செயல்பட தொடங்கியது.

சென்னையில் நிவர் புயல் காரணமாக மெட்ரோ ரயில் சேவை நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு நிறுத்தப்பட்டது. முன்னதாக காற்றின் வேகத்திற்கு ஏற்ப ரயில் சேவை இயக்கப்படும் என மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்திருந்தது.

இந்தநிலையில், நிவர் புயல் கரையை கடந்ததையடுத்து நேற்று இயல்பு நிலை திரும்பியது. பேருந்து சேவை மற்றும் புறநகர் ரயில் சேவைகள் வழக்கம் போல் இயங்கத்தொடங்கியது. இதனால், நேற்று மதியம் 12 மணி முதல் மெட்ரோ ரயில் சேவையும் மீண்டும் இயங்கத்தொடங்கியது. விடுமுறை நாள் அட்டவணையின் படி 10 நிமிடத்திற்கு ஒரு ரயில் என நேற்று இயக்கப்பட்டது. இதேபோல், கொரோனா தடுப்பு விதிமுறைகளை பின்பற்றியே பயணிகள் நிலையங்களுக்குள் அனுமதிக்கப்பட்டனர்.